கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 209/2015 மற்றும் அ.வ.எண்.210/2015

நாள். 12.02.2024 வா.சா.1 – திரு.ஜெயக்குமார்

த/பெ - திரு.வேலாயுத பெருமாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை செய்ததை 2 முதல் 4 பிரதிவாதிகளும் ஏற்றுக் கொள்வதாக கூறுகிறார்கள்.

2 முதல் 4 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) அ.வ.எண். 209/2015 ல் தபசில் சொத்தான புல எண்.1197/2 வருவாய் துறை ஆவணங்களில் தேசிய நெடுஞ்சாலை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். அ.வ.எண். 209/2015 வழக்கில் 1ம் பிரதிவாதி யார் என்றால் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில் நிர்வாக அதிகாரி ஆவார். நிர்வாக அதிகாரி இந்து அறநிலையத்துறை ஆணையரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருபவர் என்றால் சரி தான். நீங்கள் இந்,து அறநிலையத்துறை ஆணையரையும் வழக்கில் கட்சி சேர்க்க வேண்டும் என்றால் சரி தான். கட்சி சேர்த்துள்ளோம்.

2) அ.வ.எண். 209/2015 வழக்கில் தமிழ் நாடு அறநிலையத்துறை ஆணையரை கட்சி சேர்க்கப்படவில்லை என்றும் அதனால் உங்களுடைய வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எந்த வருட காலத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2024.02.12 13:49:19 +0530

வழக்காடி வருகிறீர்கள் என்றால் சுமார் 10 வருடங்கள் ஆகும். அதானல் நீதிமன்ற நடைமுறைகளில் உங்களுக்கு நன்கு அனுபவம் உண்டு என்று சொன்னால் சரியல்ல.

3) கோவில் சம்மந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு திருநெல்வேலியில் இந்து அறநிலையத்துறை இணை ஆணையர் நீதிமன்றம் என்று ஒன்று உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்கள் வழக்கறிஞரிடம் அது பற்றி கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் எனது வழக்கறிஞரிடம் கேட்டேன். எனது வழக்கறிஞர் இந்த நீதிமன்றம் தான் இந்த வழக்கை விசாரிக்க உரிய நீதிமன்றம் என்று கூறினார். இந்த அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களுக்கு சொந்தமான நிலங்கள் சம்மந்தமாகவும் இந்து அறநிலையத்துறை இணை ஆணையர், ஆணையர், செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு எதிரான வழக்குகளை இந்து அறநிலையத்துறை இணை ஆணையர் நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்ய வேண்டும் சிவில் நீதிமன்றங்களில் தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல.

4) திருக்கோவில் சம்மந்தமான சொத்துக்களுக்கு எதிராக எதிரிடை அனுபவம், காலாவதி சட்டம் ஆகியவை பொருந்தாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக கிரையம் பெறும் பொழுது இந்து அறநிலையத்துறையின் அனுமதி எதுவும் நாங்கள் பெறவில்லை என்று சொன்னால் அதற்கு அவசியம் இல்லை.

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2024.02.12 13:49:28 +0530

தபசில் சொத்தை நீங்கள் 13.08.2010 ல் ஜவஹர் செல்வம் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்று சொன்னால் சரி தான். ஜவஹர் செல்வத்திற்கு இந்த சொத்து எப்படி பாத்தியம் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் கிரையம் மூலம் பாத்தியம்.

5) தபசில் சொத்துக்கள் சம்மந்தமான பட்டா உள்ளிட்ட வருவாய் துறை ஆவணங்கள் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் வள்ளியூர் என்ற பெயரில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. கோவில் நிலம் என்று தெரிந்தே நீங்கள் கிரையம் பெற்றுள்ளீர்கள். அதனால் அந்த கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நீங்கள் கோரும் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல் என்றால் சரியல்ல.

J ANNS RAJA

Digitally signed by J ANNS RAJA
Date: 2024.02.12 13:49:36 +0530